புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்களில் ஒளிரும் நம்பிக்கைச் சுடர்கள்

**ஆய்வாளர்**
**திரு. வி.குழந்தைராஜ்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது),*
*திருச்சிராப்பள்ளி-20.*

**நெறியாளர்**
**முனைவர் த.செல்வராசு,**
*இணைப்பேராசிரியர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (த),*
*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,*
*திருச்சிராப்பள்ளி-620020.*

**ஆய்வுச்சுருக்கம்**

*படைப்பாளரின் மனச்சூழலே படைப்பின் பிறப்பிற்கு அடிப்படை காரணமாக அமைகின்றன. அதே வேளையில் வாசகனின் மனத்தைச் சரியான, நேரிய திசையில் மடைமாற்றம் செய்வதும் அவசியத் தேவையாகிறது. அந்த அடிப்படையில் வெகுசன ஊடகமான திரைப்படத்தைக் கேளிக்கையாகக் கண்டுகளிக்கும் இளைஞர்கள் சமூகத்தின் கட்டுப்பாடுகளை உள்வாங்கி, அதன்படி நடப்பதில் கவனம் செலுத்தும்போது அது சிக்கலாக மாறிவிடுகிறது. அந்த இளைஞர்களைத் தமது திரையிசைப் பாடல்வழி ஆற்றுப்படுத்த இயலும் என்பதில் தற்காலத் திரையிசைப் பாடலாசிரியர்கள் வெற்றி கண்டுள்ளனர் என்பதை ஆராய்வது அவசியத்தேவையாகிறது.*

**கலைச்சொற்கள்:** *நா.முத்துக்குமார், திரையிசைப் பாடல்கள், உளவியல், நம்பிக்கை, மனச்சூழல், சமுதாயம்*

**முன்னுரை**

*கடினமான சொற்களையும் யாப்பு முறைகளையும் புறந்தள்ளி, இலக்கணக் கட்டுக்கோப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்ட கவிதைகள் மனத்துள் ஏற்படுகின்ற உணர்வுகளின் தொகுப்பாகவே பரிணமிக்கத் தொடங்கின. படைப்பாளரின் மனச்சூழலே படைப்பின் பிறப்பிற்கு அடிப்படை காரணமாக அமைகின்றன என்ற அடிப்படையில் உலகக்*

கவிதைகளை நோக்கும்போது அமெரிக்கக் கவிதைகளில் மனச்சிக்கல் கொண்ட கவிதைகளும், தமிழீழக் கவிதைகளில் விடுதலைத் தாகமும், பிரெஞ்சுக் கவிதைகளில் தன்னிரக்க சோகமும் அதிகமாகக் காணப்படுகின்றன என்கிற உண்மை புலப்படுகிறது. எனவே மனித மனத்தை மகிழ வைப்பதிலும், அதனை ஆற்றுப்படுத்துவதிலும் படைப்பாளியின் பங்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து, மனத்தை நேரிய மனப்பான்மையில் அணுகும் தன்மையை இலக்கியப் படைப்பாளிகள், தங்கள் படைப்புகளில் மிக நேர்த்தியாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

சைக்கி, லோகஸ் என்னும் இரண்டு கிரேக்கச் சொற்கள் ஒரே சொல்லாகி, சைக்காலஜி என்ற ஆங்கிலச் சொல்லின்வழி தமிழில் 'உளவியல்' என வழக்கு பெற்றது. 'சைக்கி' என்னும் சொல் ஆன்மா என்ற பொருளையும் 'லோகஸ்' என்பது அறிவு என்ற பொருளையும் குறிக்கின்றன. அதாவது மனத்தில் உருவாகும் உணர்வுகளைப் பகுத்தறிவதாக உளவியல் அமைகிறது. முதலில் தத்துவவியலாகத் தொடங்கிய உளவியல் பின்பு அறிவியல் இயலாக உருமாற்றம் பெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளது. சாக்ரடீஸ், பிளேட்டோ போன்ற தத்துவவாதிகள், முன்பே தம்முடைய கருத்தை வெளியிட்டிருந்தாலும், மனத் தத்துவங்களைப் பற்றிய செய்திகள் முதன்முதலில் கிடைக்கும் நூல் அரிஸ்டாட்டில் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்பதே ஆகும். மனிதனின் வெளிப்புறத்தில் செயல்படுகின்ற செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது அவனுடைய உள்மன இயக்கமேயாகும்.

***"மரபும், சூழ்நிலையும் ஆகிய இரண்டுமே மனித நடத்தை எழக் காரணமாய் அமைகின்றன" (உளவியல் நோக்கில் திருக்குறள், ப.34)*** என்கிற க.பலராமனின் கூற்று நோக்கதத்க்கது.

இன்றைய நிலையில் உளவியலின் பெரும் பணி இளையோரை ஆற்றுப்படுத்துவதிலேயே அமைந்திருக்கிறது. சமூகக் கட்டமைப்பு என்பது அதனூடே பயணிக்கும் மனிதர்களின் சேர்க்கையே ஆகும். எனவே இளையோரை ஆற்றுப்படுத்தும் அல்லது அவர்களுக்கு வாழ்க்கையின்மீதான நம்பிக்கையை ஏற்படுத்தும் கவிதைகளை உளவியல் பார்வையில் அணுகுவதும் தேவையாகிறது.

தனித்தனியாகச் செயல்படக் கூடிய அளவில் இன்றைய இளைஞர்களின் மனம் அமைந்திருந்தாலும் சமூகத்தின் கட்டுப்பாடுகளை உள்வாங்கி, அதன்படி நடப்பதிலேயே அவர்களின் கவனம் அமைந்திருக்கிறது. புதிர்போல செயல்படக்கூடிய மனத்தின் நடத்தைகளாலே இளைஞர்களுடைய மதிப்பும் அளவிடப்படுகிறது. மனத்தினுடைய எண்ண ஓட்டங்களே சமூகத்தளத்தில் தொடர்ந்து அவர்களை இயங்கவும் அல்லது முடுக்கவும் காரணமாக அமைந்துவிடுகின்றன. மனத்தின் எண்ண ஓட்டங்கள் தடைபடுகிற போதோ, வேகமாக இயங்குகிற போதோ திரும்பத் திரும்பக் குறிப்பிட்ட இரு புள்ளிகளுக்கிடையே சுழலும்போதோ அவன் இயல்பு நிலையிலிருந்து பிறழவும் தொடங்கிவிடுகிறான்.

உயிர்களைப் பற்றிக் கூறும்போது தொல்காப்பியர்,

***"ஆறறிவதுவே அவற்றோடு மனனே" (தொல்காப்பியம் பொருளதிகாரம்-3, ப.152)***

என்றும்,

***"மக்கள் தாமே ஆறறிவுயிரே..." (மேலது, ப.157)*** என்றும் கூறுவதன் மூலம் மனம் என்பது மனிதனின் அடிப்படை என்பது தெளிவாகப் புலனாகிறது.

***"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை***

***அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" (திருக்குறள் தெளிவுரை, ப.17)***

மனம் என்பது மனித உடலின் ஒரு கூறு என்று வள்ளுவர் உணர்ந்து, மேற்காணும் குறளில் மனத்தின் செயலை 'அகத்துறுப்பு' என்று வள்ளுவர் கூறுகிறார்.

***"கண்டவர் இல்லென உலகத்துள் உணராதவர்***

***தங்காது தகைவு இன்றித் தாம் செய்யும் வினைகளுள்***

***நெஞ்சார்ந்த கொடியவை மறைப்பினும் அயலவர்***

***நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை" (கலித்தொகை,125:1-4)***

*மேற்கண்ட கலித்தொகைப் பாடல் யாரும் பார்க்கவில்லை என்பதனால் தம்முடைய தவறான செயல்களைப் பிறரிடம் மறைக்கலாம்; ஆனால் தம்முடைய மனத்திடமிருந்து குற்ற உணர்வை மறைக்கவே இயலாது என்பதை உணர்த்துகிறது. இதே போல குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றிலும் மனத்தினைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.*

> ***"சைவத் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தங்களிலும் மனம், உளம், அகம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன"( உளவியல் நோக்கில் திருக்குறள், ப.16)*** *என்பார் பலராமன்.*

*பாரதியின் பாடல் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரையிலான இக்கால இலக்கியங்களில் மனத்தைப் பற்றியும் அதன் உறுதி, வேகம், திறன் ஆகியன பற்றியும் பல்வேறு பார்வைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

> ***"தமிழ் இலக்கிய நெடும்பரப்பை நோக்கும்போது சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் அகச்சார்புக் கருத்துக்களே மிகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன" (இலக்கியமும் உளப் பகுப்பாய்வும், ப.116)*** *என்பார் அரங்க.நலங்கிள்ளி.*

*கவிதையில் ஒரு படைப்பாளர் எதை உணர்த்த விரும்புகிறாரோ அதையே பாடுபொருள் என்கிறோம். கவிதையின் வடிவம் காலத்திற்கேற்ப மாறி வந்திருப்பதைப் போலவே பாடுபொருளும், மாற்றமும் வளர்ச்சியும் பெற்றே வந்திருக்கிறது. உள்ளடக்கத்தில் புதுமை, கட்டுக்கோப்பு, உருவத்தில் அழகு ஆகியவையே கவிதையில் இயல்பை வெளிப்படுத்தும் தன்மையுடையனவாக அறியப்படுகின்றன. இந்தப் பிரபஞ்ச இயக்கம் இளையோரின் எதிர்காலத்திலேயே அடங்கியிருக்கிறது. சாதி, சமயம், கட்சி எனப் பகுக்கப்படுகிற இன்றைய இளையோர் நாளைய சமூகத்திற்கான தூண்களாக மாற அவர்களுக்குள் தன்னம்பிக்கையை ஒளிரச் செய்வது ஒவ்வொரு படைப்பாளியின் கடமையுமாகும். அத்தகைய கடமையை உணர்ந்த கவிஞர் தம் திரையிசைப் பாடல்களுள் இளையோருக்கான தன்னம்பிக்கையை ஒளிர வைக்கும் எண்ணற்ற வரிகளை எழுதியுள்ளார். அத்தகைய நம்பிக்கைச் சுடர்கள் குறித்து இவ்வியலில் ஆராயப்படுகிறது.*

> ***"காலத்துக்குக் காலம் வாழ்க்கை மாறிவரும் போது, வாழ்க்கையின் காலடியில் பிறக்கும் சிந்தனைகள் மாற்றமுறும்போது, அவை வெளிப்படும் கலைவடிவங்களும் மாறுபடுகின்றன" (புதுக்கவிதை ஒரு பார்வை, ப.22)*** *என்பார் கவிஞர் பாலா.*

*மனித மனத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களை, ஏக்கங்களை, கனவுகளைக், கட்டுப்பாடுகளைத், திட்டங்களை அறிவியல் அடிப்படையில் பகுத்து அதனடிப்படையில் மனத்தின் நிலையைக் கண்டறிந்து அவை ஏற்படுத்தும் தடைகளை உடைக்கும் மன கலத்தைத் தம் திரையிசைப் பாடல்களை அமைப்பதில் கவிஞர் நா.முத்துக்குமார் சிறந்து விளங்கியுள்ளார்.*

***"காகிதமும் ஆயுதமே!***

***புரட்டிப்போடுவதில்***

***எழுதுகோலும் நெம்புகோலே!***

***மை ஒரு துளி...***

***படைப்போ பெருவெள்ளம்!***

***தலையெழுத்தைக் களையெடுக்கட்டும்***

*உன் எழுத்து!*

*மனிதம் மாண்புற*

*வற்றாமல் சுரக்கட்டும்*

*உன் கருத்து!"*

என்பார் மௌலியன். அத்தகைய இளையோரின் தலையெழுத்தை தம் பேனா ஆயுதத்தால் களையெடுக்கக் களமாடியவர் கவிஞர் நா.முத்துக்குமார். தினசரி இதழ்கள், வார, மாத இதழ்கள், கவிதை நூல்கள், கட்டுரை நூல்கள் என அவருடைய எழுத்தின்வழி இளையோரை ஆற்றுப்படுத்துவதை இலட்சியமாகக் கொண்டிருந்தாலும், தம் திரைப்பயணத்தின் வழியும் அதை வெற்றிகரமாக செய்து காட்டினார் என்பதற்கு கீழ்க்கண்ட பாடல் வரிகளே சாட்சி.

*"காத்து இப்ப நம்ம பக்கம்*

*சாதகமா வீசுதே*

*தும்பில்ல நம்ம பட்டம் பருந்து*

*நூலோட போட்ட இந்த மாஞ்சா*

*யாரொடும் பீலு போடுமே" (சந்திரமுகி)*

எப்போதும் தயாராக இரு! அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறபோது விரைந்து செயல்பட்டு வெற்றிகாண் என்ற உலகத் தத்துவவியலாளர்களின் வரிகளையே இப்பாடல்வரிகள் வழியாக கவிஞர் பதிவு செய்துள்ளார்.

*"வானவில் நிமிடங்கள் அழைக்கிறதே*

*என்னுடைய பிள்ளை என்னை ஜெயிக்கிறதே*

*என்னை விட உயரத்தில் பறந்து சிகரம் தொட*

*என் வானத்தில் ஒரு நட்சத்திரம்*

*புதிதாகப் பூப்பூத்து சிரிக்கின்றதே" (கிரீடம்)*

வெற்றிக்குக் குறுக்குவழி கடின உழைப்பு என்பார்கள். இலக்கை நிர்ணயித்து வெற்றி நோக்கிச் செல்ல அழைப்பு விடுக்கிறார் கவிஞர்.

*"பனிவிழும் காலம் பூவுக்குப் பரவசம்*

*இலையுதிர் காலம் துளிருக்குப் பரவசம்*

*வான்மழை வந்தால் பூமிக்குப் பரவசம் " (மனதோடு மழைக்காலம்)*

சூழல்தான் மனிதனை உருவாக்குகிறது. இளையோர் சூழலைத் தனக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பதே கவிஞரின் கருத்தாக வெளிப்படுகிறது.

*"கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்*

*இளைப்பாற மரங்கள் இல்லை*

*கலங்காமலே கண்டம் தாண்டுமே " (சத்தம் போடாதே)*

*தடைகளைத் தாண்டி துணிந்து செல்ல உற்சாகப்படுத்தும் வரிகளுக்கு இத்திரையசைப்பாடல் கவிஞருக்கு வழி அமைத்திருக்கிறது.*

***“வெட்ட வெட்ட வாழையாவோம்***

***கொட்ட கொட்ட தேனீயாவோம்***

***கஷ்டமுனு வந்தா கவலைப்பட மாட்டோம்***

***நஷ்டமுனு வந்தா நடையக்கட்ட மாட்டோம்***

***வேலு கம்பு அருவா ஆயுதங்க எதுக்கு***

***வேலு கூட இருந்தா வெற்றிதானே நமக்கு ” (வேல்)***

*தோல்வியே வெற்றிக்கான வழி என்பதை உள்வாங்கிக் கொண்டு, தம் பலத்தை ஆயுதமாக்கி வெற்றிகாண இளைஞர்களுக்கு இப்பாடல்வழி உற்சாகமூட்டுகிறார் கவிஞர்.*

***“ஆத்துக்குள்ள மீன்பிடிக்க நீச்சல் தெரியணும்***

***கடலுக்குள்ள முத்தெடுக்க பாய்ச்சல் புரியணும் ஐயா” (தாமிரபரணி)***

*பயிற்சிக்கும், தயாரிப்புக்கும் நேரம் கொடுத்து உள்வாங்கும் கற்றலே வெற்றியை பெற்றுத்தரும் என்பதே உற்சாகமிக்க இவ்வரிகள் மூலம் கவிஞர் தரும் செய்தியாகும்.*

***“உண்மை மட்டுமே வாழ வேண்டுமே***

***கொல்லும் கோபம் கூட வேண்டுமே***

***எனக்கெனப்புது பூமி வேண்டுமே***

***தமிழ்தான் அங்கே வேண்டுமே***

***தமிழனுக்கினி ரோசம் வேண்டுமே***

***எச்சில் இதயம் மாற வேண்டுமே ” (கற்றது தமிழ்)***

*மூத்த குடியாக, முதல்குடியாக இருந்த தமிழினத்தின் அவல நிலையைக் களைய இளையோரை இப்பாடல்வழியாக அணிதிரட்டுகிறார் கவிஞர்.*

***“புயலடித்தால் கலங்காதே***

***நான்***

***பூக்கள் நீட்டுகிறேன்…***

***எதை நீ***

***தொலைத்தாலும்***

***மனதைத் தொலைக்காதே” (நெஞ்சிருக்கும் வரை)***

*எந்நிலையிலும் தன்னிலை மாறாமல் எழுவதற்கும், உயரந்தொடுவதற்கும் இந்த வரிகளை திரையிசைப்பாடலுக்குள் பதிவு செய்துள்ளார் கவிஞர்.*

***“அழியாத காலம் கல்லூரிக் காலமே***

***நினைத்தாலே நெஞ்சில் மழைமேகம் தூருமே***

***தலைகோத தோழன் இருந்தாலே போதுமே***

***நம் துயரமெல்லாம் தொலைதூரம் ஓடுமே” (கல்லூரி)***

*நாளைய சமூகத்தைத் தாங்க தூண்கள் தேவையெனில் இளையோரை ஆளுமைப்பண்பும், தலைமைத்துவமும் நிறைந்த மனிதர்களாக்க தம் பல்வேறு பாடல்கள் வழி கவிஞர் செயல்பட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.*

**தொகுப்புரை**

*படைப்பாளரின் மனச்சூழலே படைப்பின் பிறப்பிற்கு அடிப்படை காரணமாக அமைகின்றன என்ற அடிப்படையில் உலகக் கவிதைகளை நோக்கவேண்டியுள்ளது. அப்படி நோக்கும்போது மனித மனத்தை மகிழ வைப்பதிலும், அதனை ஆற்றுப்படுத்துவதிலும் படைப்பாளியின் பங்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து, மனத்தை நேரிய மனப்பான்மையில் அணுகும் தன்மையை இலக்கியப் படைப்பாளிகள், தங்கள் படைப்புகளில் மிக நேர்த்தியாகச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நம்மால் அறியமுடிகிறது. மனித மனத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களை, ஏக்கங்களை, கனவுகளைக், கட்டுப்பாடுகளைத், திட்டங்களை அறிவியல் அடிப்படையில் பகுத்து அதனடிப்படையில் மனத்தின் நிலையைக் கண்டறிந்து அவை ஏற்படுத்தும் தடைகளை உடைக்கும் மன கலத்தைத் தம் திரையிசைப் பாடல்களை அமைப்பதில் கவிஞர் நா.முத்துக்குமார் சிறந்து விளங்கியுள்ளார் என்பது புலப்படுகிறது.*

**குறிப்புகள்**


*[1] இராசமாணிக்கனார்.மா. கலித்தொகை மூலமும் உரையும். பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு-1983.*

*[2] தமிழண்ணல் (உ.ஆ). தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-3. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு-2003.*

*[3] நலங்கிள்ளி. அரங்க. இலக்கியமும் உளப் பகுப்பாய்வும். வாணிதாசன் பதிப்பகம், பாண்டிச்சேரி, முதல் பதிப்பு-1992.*

*[4] பலராமன். உளவியல் நோக்கில் திருக்குறள். திருமால் & கோ, சென்னை, முதல் பதிப்பு:1999.*

*[5] பாலா. புதுக்கவிதை ஒரு பார்வை. அகரம், தஞ்சாவூர், நான்காம் பதிப்பு-2006.*

*[6] வரதராசன்.மு (உ.ஆ). திருக்குறள் தெளிவுரை. கழக வெளியீடு, சென்னை, 16-ஆம் பதிப்பு-2001.*